2024 பிப்ரவரி 21] [பேரவைத் தலைவர்]

தேமதுர தமிழோசை
உலகெங்கும் ஒலிக்க
எந்நாளும் உழைத்திடுவோம்.
அனைத்து ஆவணங்களிலும்
தமிழிலேயே
கையொப்பமிடுவோம்.
குழந்தைகளுக்குத்
தமிழ் மொழியில்
பெயர் சூட்ட
பரப்புரை செய்திடுவோம்.
இணையற்ற தமிழுடன்
இணையத் தமிழையும்
காத்து வளர்ப்போம் என்று
உலக தாய்மொழி நாளான இன்று
உளமார உறுதி கூறுகிறேன்."

(மாண்புமிகு பேரவைத் தலைவர் உறுதிமொழி வாசகங்களைப் படிக்க படிக்க மாண்புமிகு உறுப்பினர்கள் அதனைத் திரும்பச் சொல்லி உறுதிமொழி எடுத்துக்கொண்டனர்.)

4. அறிவிப்புகள்

(அ) 'உங்கள் தொகுதியில் முதலமைச்சர்' திட்டப் பணிகளின் விவரம், உறுப்பினர்களின் சிறு கணினிகளில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 7-5-2022 அன்று விதி 110-ன்கீழ் 'உங்கள் தொகுதியில் முதலமைச்சர்' திட்டம் அறிவிக்கப்பட்டு, திட்டச் செயலாக்கத்திற்கான வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்டன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், அவரவர்கள் தொகுதியில் செயல்படுத்தப்பட வேண்டிய 10 முக்கிய திட்டங்கள் குறித்துத் தெரிவிக்குமாறு கடிதம் மூலமாகக் கேட்டுக்கொண்டார்கள். 'உங்கள் தொகுதியில் முதலமைச்சர்' திட்டத்தின்கீழ், 234 சட்டமன்றத் தொகுதிகளிலும், 2023-2024 ஆம் ஆண்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு, செயல்படுத்தப்படும் பணிகள்

[பேரவைத் தலைவர்] [2024 பிப்ரவரி 21

மற்றும் 2024–2025 ஆம் ஆண்டில் எடுத்துக்கொள்ளப்படவுள்ள பணிகள் குறித்த விவரங்கள் PDF வடிவத்தில் மாண்புமிகு உறுப்பினர்களின் இருக்கைக்குமுன் உள்ள சிறு கணினிகளில் தனித்தனியே பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

5. தகவல் கோரல்

(அ) கிருஷ்ணகிரி மாவட்டம், யானைகள் தாக்கி மனித உயிரிழப்பு, நிவாரணம் வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. முனுசாமி அவர்கள்.

திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஓராண்டில் மட்டும் என்னுடைய கிருஷ்ணகிரி மாவட்டத்தில் யானைகளால் தாக்கப்பட்டு 13 பேர் உயிரிழந்துள்ளனர். வேப்பனஹள்ளி தொகுதியில் மட்டும் ஒரு பெண் உள்பட 5 பேர் உயிரிழந்ததோடு, ஒருவர் படுகாயமடைந்து மருத்துவமனையிலே சிகிச்சை பெற்று வருகிறார். இதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டும். காரணம், வனப் பகுதியை ஒட்டியுள்ள பகுதிகளில் முழுமையாக மின்வேலிகள் போடப்படவில்லை. மின்வேலிகள் போடுவதை அரசு ஒரு சிறப்புத் திட்டமாகக் கொண்டு வந்து மின்வேலிகளை அமைக்க வேண்டும். அதோடுமட்டுமல்லாமல், வனப் பகுதியை ஒட்டியுள்ள கிராமங்களில், இரவில் யானைகள் வருகின்றபோது, அங்கு வசிக்கிற மக்களுக்குத் தெரிவதில்லை. அதனால், அந்தப் பகுதியில் உயர் கோபுர மின் விளக்குகளை அமைக்க வேண்டும் என்பதோடு, யானைகள் விளைநிலங்களில் விளைகின்ற பயிர்களை நாசம் செய்துவிடுகின்றன. டெல்டா மாவட்டங்களில் பயிர்களுக்கான காப்பீட்டுத் தொகையை அரசே வழங்குகிறது. அதேபோல, வனப் பகுதியை ஒட்டியுள்ள விவசாய நிலங்களின் உரிமையாளர்களுக்கும், அந்த நிலங்களுக்கும் அரசே காப்பீடு தொகையை வழங்க வேண்டும். பாதிப்புகள் ஏற்படுகின்றபோது, காப்பீடு தொகைகள் மூலமாக அவர்கள் பாதிப்பிலிருந்து மீண்டுவரக்கூடிய வாய்ப்புகளை வழங்க வேண்டும். அந்தப் பகுதியில் நீண்ட நாட்களாக போதிய வனக் காவலர்கள்